உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவுந்தியார்

[தெளிவுரை]

விஜயதசமி வெளியீடு

11-10-1997

விலை ரூ. 5.00

காசித்திருமடம்] [திருப்பனந்தாள்

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவுந்தியார்

தெளிவுரையுடன்

திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் அதிபர்
"கயிலை மாமுனிவர்"

**திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்
சுவாமிகள் அவர்களின்**

அருளாணையின் வண்ணம் வெளியிடப்பெற்றது.

விளக்கவுரையாசிரியர்:

தருமபுர ஆதீனப்புலவர்,
தொல்காப்பியச் செல்வர், சித்தாந்த நன்மணி ,பண்டித வித்துவான்
பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி , எம்.ஏ.,
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி
திருப்பனந்தாள்.

காசித்திருமடம் 1997 திருப்பனந்தாள்

மூன்றாம் பதிப்பு
படிகள் 2000
விலை ரூ. 5.00

கிடைக்குமிடம்:

நிர்வாக ஆசிரியர்
"ஸ்ரீ குமரகுருபரர்"
காசித்திருமடம்
திருப்பனந்தாள் - 612 504
தஞ்சை மாவட்டம்

ஸ்ரீ குமரகுருபரர் ஆப்செட் பிரிண்டர்ஸ்
காசித்திருமடம்,
திருப்பனந்தாள்

பொருளடக்கம்

திருச்செந்திலாண்டவன் துணை

பதிப்புரை

திருமுறைகள், சாத்திரங்கள், புராணங்கள், பிரபந்தங்கள் முதலியவை சைவசமயாசாரியர்களாலும் அவர்களின் அருள்வழி வந்த அருளாளர்களாலும் அருளப் பெற்றவை. இவைகளில் திருமுறைகளை அடுத்துத் தோன்றியவை சாத்திரநூல்கள் ஆகும். இச்சாத்திர நூல்களைச் சான்றோர் பதினான்கு சித்தாந்த சாத்திரம் என வரையறை செய்து சிறந்தமுறையில் போற்றிப் பயின்று வருகின்றனர். இப்பதினான்கு சாத்திர நூல்களையும் மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் வழங்குதல் உண்டு.

"உந்திகளிறு வுயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மைபிரகாசம் - வந்த அருட்
பண்புவினா போற்றி கொடிபாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பமுற்று"

என்ற வெண்பா, சாத்திரநூல்களை முறைப்படுத்தித் தொகுத்துரைக்கும்.

மெய்கண்டநூல்கள் பதினான்கனுள் திருவுந்தியார் முதற்கண்வைத்து எண்ணப்படுவதாகும். இந்நூலை அருளியவர் உய்ய வந்ததேவ நாயனார். திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் முதல்நூலும் வழி நூலுமாகச் சிறப்புற்று விளங்குவன. இவ்விரு நூல்களும் உயர்போதமாகிய சிவஞான போதத்திற்குக் காலத்தால் முற்பட்டனவாகும். சாத்திர நூல்களைத் தொகுத்துக் கூறும் வெண்பாவில் இவ்விரு நூல்களும் சிவஞான போதத்திற்கு முன் வைக்கப்பெற்றிருத்தலையும் காணலாம். இந்நூலில் உயிர்களைப் பாசமாகிய கடலினின்றும் கரையேற்றுதற்குரிய நெறிமுறைகள் கூறப்பட்டுள்ளன.

விளையாட்டு வாயிலாக இப்பாடல்கள் அனைத்தும் அமைந்துள்ளன. இவ்வாறு பெண்கள் பலரும் கூடி விளையாடும் விளையாட்டு வாயிலாக இப்பாடல்கள் எழுந்தன என்பதற்கேற்ப என் பெணே [என் பெண்ணே] என ஈரிடங்களில் இச்சொல் பயின்று வந்துள்ளன. இவை இரண்டடியின் மிக்கு வந்த கலித்தாழிசைகளாகும். திருவுந்தியார் என்ற பெயரில் திருவாசகத்தில் 19 பாடல்கள் உள்ளன. பெரியாழ்வாரின் பாடல்களுள்ளும் இவ்வகையில் அமைந்த பாடல்கள் காணப்படுகின்றன.

இதன் சிறப்பு:

இப்பெயர்க்கு முன் திருவென்றும், பின் ஆரென்றும் கூறப்பெற்றுள்ள சிறப்பு இதன் பெருமையை விளக்கி நிற்கும். மெய்ப்பொருளை ஆராய்ச்சி அறிவு, அழுந்தி அறியும் அறிவு [அனுபூதி அறிவு] என இருவகையால் தெளிந்து உணரலாம். இவற்றுள் திருவுந்தியார் அழுந்தி அறியும் [அனுபூதி அறிவு] அறிவாக விளங்குகின்றது. விளையாட்டு வகைகளுள் ஒன்றான இவ்வமைப்பில், மெய் நூற்பொருளை ஆசிரியர், கூறியிருக்கும் திறம் அறிந்து இன்புறுதற்குரியது.

ஆசிரியர்:

இவர் பெயர் உய்ய வந்த தேவ நாயனார் என்பதாகும். இவர் வடநாட்டிலிருந்து இராமேசுவரத்திற்குக் கடல் நீராட வந்ததாகவும், அவ்வாறு நீராடி மீளுங்கால் திருவியலூருக்கு வர, அவ்வூரில் ஆளுடைய தேவ நாயனார் என்பார் ஒருவர் குருவருள் பெற்று உய்தற்குத் தகுதியுடையராய் இவரை அணுகி இவரிடம் அருள் பெற்றதாகவும், அவருக்காகவே இந்நூலை ஆசிரியர் செய்ததாகவும், இதைச் செய்த பின் மீண்டும் வடநாட்டிற்கே சென்று விட்டதாகவும் பழைய வரலாறு ஒன்று கூறுகிறது. ஆயினும் இதற்கு ஏதும் சான்றின்லை. இந்நூலின் நடை திருமந்திரத்தின் நடையை நினைவூட்டியும், நூற்பொருள் பழைய தமிழ் முறையில் அமைந்திருப்பதையும் கொண்டு இவர்

தமிழ்நாட்டவரே எனக்கருத இடனுண்டு [1] இவையன்றி இவரைப் பற்றிய வரலாறு ஏதும் தெரிந்திலது[2] இவர் செய்த நூல் ஈதொன்றேயாம். இவர் காலம் கி.பி.1118 என்பர்.

நுவலும் பொருள்:

இந்நூலாசிரியர் திருவருளில் தோய்ந்த வண்ணம் நின்று அத்திருவருள் அவ்வப்பொழுது உள்நின்றுணர்த்திய கருத்துக்களை இந்நூலில் அருளியுள்ளார். ஆதலின் இந்நூற்பொருள் ஓரிரு இடங்கள் தவிரக் கோர்வையின்றியமைந்துள்ளது. இங்கு அவை ஓராற்றான் நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

இறைவனின் நிலையும் கருணையும்:

சிவபரம் பொருள் தனக்கென ஒருவடிவில்லாதது. மாலயன் முதலிய தேவர்களாலும் காண்டற்கரியது. ஆயினும் அப்பரம் பொருளே தகுதியுடைய உயிர்களுக்குக் குருவாக எழுந்தருளி வந்து உய்யக் கொள்ளும் கருணையுடையது. தானாகத் தன் திருவடியில் கூட்டிக் கொள்வது. இறைவன் திருவடியின்பம் இத்தகையது என்று எவ்வண்ணம் சொல்ல முடியும்? அப்பேற்றிற்குரியார் தாமே அவ்வின்பத்தினை நுகர்ந்து இன்புற முடியும். இறைவன் ஒருவனே ஆவன். அவனே உயிர்க்குயிராகி விளங்கும் நிலையில் அனேகனாவன். அவன் உயிர்க்குத் தலைவனுமானவன். நம்மை ஆட்கொள்ளுதற்குரியவனும் அவனே. அனைத்தும் நம் செயலென்றும், அனைத்திற்கும் காரணம் நான் என்றும் கருதும் தருக்கு ஒழிந்தால் அவர்கட்கு இறைவனே அனைத்தையும் முன்னின்று அருளுவன். தன்னையே தந்தும் உதவுவன்.

---

[1] சைவசித்தாந்த சமாசப் பதிப்பு பக்-27

[2] இவரை மெய்கண்டாரின் குருமூர்த்தியாகிய பரஞ்சோதியார் எனக் கருதவும் இடனுண்டு எனக்கூறி ஆராய்ச்சியுலகைச் சிந்திக்க வைத்துள்ளார். திரு.மு. அருணாசலம் பிள்ளையவர்கள். தமிழ் இலக்கிய வரலாறு 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி பக்-931.

ஞானாசிரியர் தம் தீக்கையினால் வெளிப்படுத்தி அருளுவர். அவ்வாறு வெளிப்படுத்தப் பெற்ற திருவருளை உணர்ந்து அதன்வழி நின்று ஒழுகுதல் தக்கதாகும். அவ்வாறு ஒழுகுவது அவரவரும் தம்மைத் தாம் முழுமையாகக் காண்பதாகும். சிவபரம்பொருளை இவ்விடத்தில்தான் கூட வேண்டும் என வரையறுப்பதற்கில்லை. ஞானாசிரியனால் உணர்த்த உணரும் இடமே அவனை அடைதற்குரிய இடமாம்.

இறைவனை அடைதற்காம் யோகநெறி

1. ஆதார யோகம்:

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்று சொல்லப்பட்ட ஆறு இடங்களிலும் முறையே அயன் மால் உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்னும் கடவுள்களைக் குருவருளினால் எழுந்தருளுவித்துக் கொண்டு அவர்களை அவ்வம் முறையில் எண்ணி ஒன்றி வழிபடுவதே ஆதார யோகமாம்.

2. நிராதார யோகம்:

நாளடைவில் இப்பற்றுக் கோடுகள் தாமே நெகிழுமாறு எண்ணி, அவ்வாறு எண்ணுகின்றோம் என்ற எண்ணமும் கெட ஒன்றி நிற்பது நிராதார யோகமாம்.

3. அதன் மேல் நிலை (மீதானம்):

அதற்கு மேலும் அக்கடவுளர்க்கு மேலாக விளங்கும் இறைவனைக் கருத்தொன்றி வழிபடின் அவன் அவர்கள் உள்ளத்தில் எழுந்தருளி நிற்பன். அதுவே அப்பரம்பொருள் நிற்கும் இடமாம். மேற்கூறிய ஆறு ஆதாரங்களில் எழுந்தருளுவிக்கப் பெற்று வழிபடும் கடவுளர்கள் எண்ணும் பொழுது உண்டாய் எண்ணாத பொழுது இல்லையாய் இருப்பர். ஆதலின் அவர்கள் தலைமையுடையராகார். அவர்களுக்கு மேலாக விளங்கும் சிவபரம் பொருளே தலைமையும் முதன்மையும் உடைய இறைவன் ஆகும்.

வெளிவந்து இயங்கும் உயிர்க்காற்றினைக் குருவருளால் உள்ளடக்கி ஒன்றியிருந்து நினையின் மன ஒருமைப்பாடு ஏற்படும். இறைவனை அடைதற்கு இதுவன்றிப் பிற நெறிகள் பயன்படாவாம்.

சுழுமுனையில் சென்ற உயிர்க்காற்று நாதகலை உள்ள உச்சியில் செல்லுமாறு அருள் வழியில் நிலையுறுவோரே நாலாம் நிலையாகிய சாயுச்சநிலை எனப்படும் திருவடிக்கண் அணைந்து இன்புறும் பேற்றைப் பெறுவர். இறைவன் இருக்குமிடமும் அதுவாம்.

அணைந்தோர் தன்மை:-

உலகியற் சூழலில் கருத்தைச் செலுத்தாது திருவருள் வயப்பட்டு நிற்கும் ஞானியர் தமக்கு ஒரோவழி இன்பதுன்பங்கள் வரினும் அவற்றிற்காக மனம் தளரார். தரையில் வைக்கப்பட்ட மணியின் நாவினைப் போன்று அசைவற்றிருப்பர். தன்னுணர்ச்சியையும் உலகியல் உணர்ச்சியையும் கடந்த ஞானியர் இறைவனையே கண்டிருப்பர். அந்நிலை நீங்கி ஒரோவழி உலகியல் நினைவுவரின் அதனையும் திருவருள் செயலாகவே நினைப்பர். இவர்களே மேலான ஞானியராவர். மேற்கூறப்பட்ட ஞானியர்க்கு ஏன்ற வினையால் உலகியலின்பங்களைத் துய்க்க நேரினும், அவர் தம் எண்ணமும் கருவிகளும் இறையுணர்ச்சியிலேயே இருப்பதால் அவ்வின்பமும் பேரின்பமேயாம். இவ்வருள் உணர்ச்சியால் ஏறும் வினை [ஆகாமியம்] அவர்களுக்கு நேர்வதில்லை. இத்தகையோர்க்குப் பழவினையும் குருவருளால் முன்னமே நீங்கப்பெற்றதாகும். இவ்வாற்றான் ஞானியர்க்கு மும்மை தரும் வினையும் மூளாவாம். பேரின்பமாம் பெருந்தலைவியோடு கூடியிருப்போனும், ஒப்பற்ற இன்ப வடிவினனாய் இருப்பவனுமான இறைவனே ஞானியர்களை ஆட்கொண்டு அருளுகின்றான். பேய் பிடிக்கப்பட்டவனின் மனமும் சொல்லும் செயலும் பேயின் தன்மையேயாய் விளங்கி நிற்றல் போலத், திருவருளால் ஆட்கொள்ளப்பட்ட உயிரும் திருவருள் செயல் உடையதாகவே விளங்கும்.

6. வீட்டில் இருக்கில் என் நாட்டிலே போகில்என்
கூட்டில்வாள் சாத்திநின்று உந்தீபற.

7. பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அக்கொழு நீயறிந்து உந்தீபற.

உவமைநலம்:

திருவருள் வயப்பட்டு நிற்கும் ஞானியர்களின் மனம், அலைவின்றி ஒரு தன்மைத்தாய் இருக்குமென்பதற்கு நிலத்தின் கண் வைக்கப்பட்ட மணியின் நாக்கினை உவமை கூறி இருப்பதும், திருவருள் வயப்பட்டு நிற்பார் அத்திருவருளின் வயமாகவே நிற்பர் என்பதற்குப் பேய் பிடிக்கப் பட்டாரை உவமைகூறி இருப்பதும் அறிந்து இன்புறத் தக்கதாம்.

உருவக நலம்:-

முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்ததென்று உந்தீபற
அப்பழம் உண்ணாதே உந்தீபற.

காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென்று உந்தீபற
வரட்டுப் பசுக்களென்று உந்தீபற.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவுந்தியார்

விளக்கவுரை

----

1. அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென்று உந்தீபற.
தானாக தந்ததென்று உந்தீபற.

விளக்கவுரை: தனக்கென ஒரு வடிவு இல்லாததும், திருமால், பிரமன் முதலிய தேவர்களாலும் காண்டற்கு அரியதாகவும் விளங்கும் சிவபரம்பொருளே தகுதியுடைய உயிர்களுக்கு குருவாக எழுந்தருளி வந்து உய்யக் கொண்டது. அது, தான் ஆகுமாறு செய்து தன் திருவடியிலே கூட்டிக் கொண்டது என்பதாம்,

அகளம்- வடிவில்லாதது. இயல்பாகவே மலம் இல்லாதது எனலும் ஆம். சகளம்- உயிர்களை ஈடேற்ற, அவ் உயிர்களின் தகுதிக்கு ஏற்பக் கொள்ளும் திருவுருவம். குருவாக எழுந்தருளி வந்த பெருமான், தான் ஆக உயிர்களைச் செய்வன் என்பதைத் ''தன்னை அறிவித்துத் தான் தானாகச் செய்தானை '' என்னும் சிவஞான போதவெண்பாவினாலும், ''தன் நிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்'' என்னும் திருவருட் பயனாலும் அறியலாம்.

இத் திருஉந்தியாரின் கருத்தினையே,

"அகளமயமாய் நின்ற அம்பலத்து எம்கூத்தன்
சகளமயம் போல் உலகில் தங்கி - நிகளமாம்
ஆணவமூல மலம் அகல ஆண்டான் காண்
மாணவக என்னுடனாய் வந்து"

எனவரும் திருக்களிற்றுப்படியார் விளக்கும்.

2. பழக்கந் தவிரப் பழகுவ தன்றி
உழப்புவ தென்? பெ.ணே! உந்தீபற
ஒருபொரு ளாலேயென்று உந்தீபற.

வி-ரை: மாணாக்கனே! ஒப்பற்ற பரம்பொருளின் துணையினாலே, இதுகாறும் சார்பு எனக் கருதியிருந்த உலகியற் பொருள்களோடு ஊடாடும் பழக்கத்தைத் தவிர்த்துத் திருவருளைப் பெற்றபின்பும், அத்திருவருளைச் சார்பாகக் கொண்டு ஒழுகாது மீண்டும் உலகியற் பொருள்களில் தொடக்குண்டு வருந்துவது ஏனோ? என்பதாம்.

சார்பு உணர்ந்து சார்புகெட ஒழுகுக என்பது கருத்து. பெண்ணே, என்பது பெணே என நின்றது; தொகுத்தல் விகாரம். இறைவனே உயிர்க்குத் தலைவனாதலின், மாணாக்கனைப் பெண்ணே என விளித்தார். நெஞ்சமாகிய பெண்ணே எனக் கூறலும் ஒன்று. பெண்ணே! ஒரு பொருளாலே பழக்கந் தவிரப் பழகுவதன்றி உழப்புவது ஏன்? எனக் கூட்டுக.

3. கண்டத்தைக் கொண்டு கரும(ம்) முடித்தவர்
பிண்டத்தில் வாரார் என்று உந்தீபற
பிறப்(பு) இறப்(பு) இல்லையென்று உந்தீபற.

வி-ரை: முன்னைய தவத்தால் ஞானாசிரியனாக வரக் கண்ட அப்பரம்பொருளைக் கொண்டே, தமது காரியத்தை முடித்துக் கொண்டவர்கள் மீண்டும் உடலோடு கூடித் தொடக்குண்ணார். அவர்களுக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை என்பதாம்.

கண்ட+அத்தைக்கொண்டே = கண்டத்தைக் கொண்டே என நின்றது. அகரம் தொகுத்தல் விகாரம். அவனருளே கண்ணாகக் கண்ட அந்தப் பரம்பொருளைக் கொண்டே என்பது பொருள். அப் பரம்பொருளாலே கருமம் முடித்தலாவது, தீக்கையினாலே பழவினையும், எடுத்த உடலினாலே நுகர்வினையையும் ஞானாசிரியனது அருள்வழி நிற்றலாலே வருவினையையும் போக்கிக் கொள்வதாகும். உயிர்களால் அளவின்றி ஈட்டப்படும் வினைத்தொகுதிக்குச் சஞ்சிதம்

என்றும், பிறந்த உடம்பால் முகந்து நின்ற வினைக்குப் பிராரத்துவம் என்றும், முகந்து வந்த வினையை அனுபவிக்கும்பொழுது செய்து கொள்ளப்படும் வினைக்கு ஆகாமியம் என்றும் பெயர். பிராரத்துவம்- ஏன்றவினை. ஆகாமியம்- ஏறும்வினை. பிண்டம்- உடல்.

"துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக் கெலாம் அறுத்தநற் சோதி
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

என்னும் ஆளுடையடிகளின் அநுபவ விளைவும்,

"கண்டதைக் கொண்டு கருமம் முடித்தவரே
அண்டத்தின் அப்புறத்த தென்னாதே - அண்டத்தின்
அப்புறமும் இப்புறமும் ஆரறிவும் சென்றறியும்
எப்புறமும் கண்டவர்கள் இன்று".

எனவரும் திருக்களிற்றுப்படியாரும் இத்திருவுந்தியாரின் கருத்தை விளக்கி நிற்றல் காண்க.

4. **"இங்ஙன் இருந்ததென்று எவ்வண்ணம் சொல்லுகேன்**
அங்ஙன் இருந்ததென்று உந்தீபற
அறியும் அறிவதன்று உந்தீபற.

வி-ரை: ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த இன்ப மயமான சிவபரம்பொருளின் திருவடிகளில் புக்கு நின்று துய்க்கும் இன்பத்தினை இங்ஙனம் இருந்ததென்று எங்ஙனம் சொல்லமுடியும்? அவ்வின்பினை நுகர்ந்து இன்புறுவதன்றிச் சொல்ல வாராத அத்தன்மையுடையதாம். காரணம் அஃது அறியும் அறிவிற்கு வேறாய், அறியப்படும் அறிவாகாது அவ்வறிவுக்கு அறிவாய் உள்ளே அறியப்படுவதாய் நிற்றலின் என்பதாம்.

"செங்கணவன் பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்" என்றும்,

''சொல்லு வதறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தான்எனைச் செய்தது
தெரியேன் ஆ ஆ செத்தேன் அடியேற்கு
அருளிய தறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்''

என்றும் மணிவாசகர் அவ்வின்ப அநுபவத்தை அருளுதல் காண்க.

''அன்றுமுதல் ஆரேனும் ஆளாய் உடனாகிச்
சென்றவர்க்கும் இன்னதெனச் சென்றநிலை- இன்றிதனை
எவ்வா றிருந்ததென் றெவ்வண்ணம் சொல்லுகேன்
அவ்வா றிருந்த தது.''

''ஒன்றும் குறியே குறியாதலால் அதனுக்கு
ஒன்றும் குறியொன் றிலாமையால் - ஒன்றோடும்
உவமிக்க லாவதும் தானில்லை ஒவ்வாத்
தவமிக்கா ரேயிதற்குச் சான்று.''

5. ஏகனுமாகி அனேகனும் ஆனவன்
நாதனும் ஆனான் என்று உந்தீபற
நம்மையே ஆண்டான்என்று உந்தீபற.

வி-ரை: ''ஒன்று என்றது ஒன்றே காண்'' என்னும் மெய்கண்டார் அருண் மொழிப்படி இறைவன் ஒருவனேயாவன். அவன், அவள், அது என முத்திறப்பட்டு இயங்கும் உலகத்தில் உயிர்க்குயிராய் விளங்கி அருள்செய்யும் திறம்பற்றி அவ்விறைவனும் ஒருவனே அனேகன் ஆகின்றான். அகரவுயிர் இன்றேல் அக்கரங்கள் இன்றாமாறு போல அவ்விறைவன் இல்லையேல் உலகியக்கம் இல்லையாதலால் அவ்விறைவனே உலகிற்குத் தலைவன் எனப்படுவான். அவன்தான் நம்மை யாட்கொண்டருளும் குருமூர்த்தியாவன் என்பதாம்.

ஏகனே அனேகனாகி நாதனுமானான் என்னும் கருத்தினை ''ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க'' என்னும் மணி மொழியும் விளக்கி நிற்றல் காணலாம். அவனே நம்மையாட்கொண்டருளும் குருமூர்த்தியாவான். இதனைப் ''புவனியிற் சேவடி தீண்டினன் காண்க, அவன் எனை ஆட்கொண்டருளினன் காண்க சிவன் என யானும் தேறினன் காண்க'' எனவரும் மணிவாசகரின் அநுபவ மொழியால் நன்கறியலாம்.

6. நம்செயல் அற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென்று உந்தீபற
தன்னையே தந்தான் என்று உந்தீபற.

வி-ரை: உலகினுள் என்செயலெல்லாம் உன்விதியே, நீயே உள்நின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும், நிலவுவதோர் செயல் எனக்கு இன்று உன் செயலே என்றும் நினைந்த வண்ணம் நம்செயல் அற்று தான் அல்லாததனைத் தான் என்றும், தன்னுடையது அல்லாததனைத் தன்னுடையது என்றும் கருதும் யான், எனது என்னும் செருக்கினையும் அறுத்துவிட்டால் சிவபெருமானும் பிறவியறுமாறு செய்து ஏற்றுக்கொள்வன். அது மட்டுமன்றித் ''தந்ததுன்தன்னை'' என்புழிப் போலத் தன்னையே தந்தும் நிற்பன் என்பதாம்.

சிவஞான சித்தியாரும் இக்கருத்தினை உடன் பாட்டிலும் எதிர்மறையிலுமாக வைத்து விளக்கிப் பேசும் அப்பாடல் வருமாறு.

"யான் செய்தேன் பிறர் செய்தார் என்னதுயான் என்னும்
இக்கோணை ஞானஎரியால் வெதுப்பிநிமிர்த்துத்
தான் செவ்வே நின்றிட அத்தத்துவன் தான் நேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொளித் திட்டோடும்
நான் செய்தேன் எனுமவர்க்குத்தான் அங்கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்கும் கன்மம்
ஊன்செய்யா ஞானந்தான் உதிப்பி னல்லால்
ஒருவருக்கும் யான் எனது இங்கு ஒழியாதன்றே."

'அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமையெல்லாம்' என்னும் தொடக்கம் உடையதும், 'நாயிற்கடையாம் நாயேனை' என்னும் தொடக்கம் உடையதுமான திருவாசகங்கள் நம் செயலற்று வாழும் அநுபவ நிலையை விளக்குவனவாம்.

" கயல்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக் கலந்தாண்டலுமே
அயல்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ."

"வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல்நீர் மண்கெடினும்
தான்கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்(கு)
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என்னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ".

எனவரும் திருவாசகங்களும் ஈண்டு ஒப்பிட்டு உணர்தற்குரியன.

7. **உள்ளம் உருகில் உடனாவர் அல்லது**
தெள்ள அரியர் என்று உந்தீபற
சிற்பரச் செல்வர் என்று உந்தீபற.

வி-ரை: உயிர்களுக்குத் தலைவராக விளங்கியருளும் அருட்செல்வர் சிவபெருமானே யாவர். அப்பெருமான் உயிர்கள் தோறும் உடனின்று உதவுகின்றார். எனினும் அவ்வுண்மையைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதியுணர்வார்கள். அறிய இயலுமேயன்றி, அல்லாதார் ஆய்வுக் கண் கொண்டு காணுதற்குரியரல்லர் என்பதாம்.

இப்பாடல் ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதித்துக் காண்டற்கியலாத பரம்பொருளை, வினையேன் 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்றபடி அழுது அழுது முதிர்ந்த உருக்கத்தாலேயே காண இயலும் என விளக்குகின்றது. "காதலாகிக் கசிந்து" என்றும் 'களித்துக் கலந்ததோர் காதற் கசிவொடு' என்றும் தொடங்கும் திருமுறைகள் ஈண்டு ஒப்பிட்டு உணர்தற்குரியன. "உயிர் ஆலவாலத்து உணர்வு நீர் பாய்ச்சி வளர்ப்பார்க்கு ஒளிபூத்து அருள் பழுத்த மலர்க் கற்பகமே" என

அழைக்கும் அருண்மொழி இவ்வுள்ள உருக்கத்தின் பயனாக விளைந்த அநுபவத்தைக் காட்டுகின்றது.

"உள்ள முதலனைத்தும் ஒன்றாய் உருகவரின்[1]
உள்ளம் உருவகந் துன்னுடனாம்- தெள்ளி
உணருமவர் தாங்கள் ஊராக என்றும்
புணரவர தில்லாப் பொருள்".

என்னும் திருக்களிற்றுபடியார் இவ்வுந்தியார்க் கருத்தினை விளக்கி நிற்கும்.

"பண்ணிற் பொலிந்த வீணையர்
பதினெண் கணமும் உணர நஞ்சு
உண்ணப் பொலிந்த மிடற்றினார்
உள்ளம் உருகில் உடனாவர்."

என வரும் ஞானசம்பந்தரின் திருவாக்கிலுள்ள தொடர் இப்பாடலின் முதல் தொடராய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

8. ஆதாரத்தாலே நிராதாரத்தே சென்று
மீதானத்தே செல உந்தீபற
விமலற்(கு) இடம்அது என்(று) உந்தீபற.

வி-ரை: மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம்,அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்று சொல்லப்பட்ட ஆறு ஆதாரங்களிலே முறையே பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவம் என்னும் தெய்வங்களை ஞானாசிரியனின் கருணையினாலே பெற்றுத் தியானிப்பது ஆதாரயோகம் என்று கூறப்படும். இதற்கு மேலாக

---

[1] 'ஒன்ற ஒருவவரின்' என்றும் பாடம்.

இவ்விரு யோகங்களையும் தூல, சூக்கும, பரம் என மூன்றாகப் பகுத்து ஏழு பாடங்களில் திருக்களிற்றுப்படியார் விளங்கும்.

இப் பற்றுக்கோடுகளைத் தானே நெகிழும் வண்ணம் தியானித்து, அங்ஙனம் தியானிக்கின்ற எண்ணமும் கெட அதுவதுவாய் நிற்பது நிராதாரயோகம் எனப்படும். இம்முறையே மேலும் எண்ணென்றும் வண்ணம் இருக்கின்ற யோகிகள்பால் இறைவன் உள்நிற்பன். இதுவே அப்பரம் பொருள் இருக்கும் இடமுமாம் என்பதாம்.

இவ்விரு யோகங்களையும் தூல, சூக்கும, பரம் என மூன்றாகப் பகுத்து ஏழு பாடல்களில் திருக்களிற்றுப்படியார் விளக்கும்.

9. **ஆக்கில் அங்கேயுண்டாய் அல்லது அங்கில்லையாய்ப்**
பார்க்கில் பரமதன்(று) உந்தீபற
பாவனைக்(கு) எய்தாதென்(று) உந்தீபற.

வி-ரை: இவ்வாதார யோகத்தில் ஆறு ஆதாரங்களிலும் மனத்தகத்து வைத்து எண்ணிக் கொண்டு இருந்த கடவுள்களை அவ்வாறு எண்ணும் பொழுது உண்டாய் எண்ணுதலற்ற பொழுது இல்லையாய் இருத்தலின் அவையே சிவபரம்பொருள் என்று கருதற்க. அச்சிவபரம்பொருள் மாற்றம் மனம் கழிய நிற்பது ஆதலின் பாவனையால் காண இயலாது என்பதாம்.

10. **அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாகத்**
துஞ்சாது உணர்ந்திருந்து உந்தீபற
துய்ய பொருளீதென்று உந்தீபற.

வி-ரை: திருவைந்தெழுத்தையே பற்றுக்கோடாக, அதன் உண்மையறிந்து உணர்தலையே அறிவாகக் கொண்டு மடியின்றி ஓதியுணரல் வேண்டும். அத்திருவைந்தெழுத்தே இறைவனின் வடிவமாகும் என்பதாம்.

'நமச்சிவாய வாழ்க' என்ற விடத்துத் தூலபஞ்சாட்சரமும் 'சிவாயநம எனப் பெற்றேன்' என்ற விடத்துச் சூக்கும பஞ்சாட்சரமும் கூறப்பட்டிருத்தல் காண்க. சிகரம் இறைவனையும், வகரம் திருவருளையும், யகரம் உயிரையும், நகர மகரங்கள் மலங்களையும் குறிப்பனவாம். உயிர்கள்

மலவாதனை நீங்கித் திருவருளைப் பெறுவதற்கு இத்திருவைந்தெழுத்தே உதவுவதாகும். இதனைத் துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும் நெஞ்சகம் நைந்து நினைதல் வேண்டும் எனத் திருஞானசம்பந்தரும் இதனது பயன் சிவகதியே எனத் திருநாவுக்கரசரும்,1 இதனை இடையறாது ஓதிய பயிற்சி வயத்தால் தான் மறக்கினும் தன் நா மறக்காது எனச் சுந்தரரும்2 இத்திருமந்திரமே தனக்குத் திருப்பெருந்துறையில் இறைவன் குருமூர்த்தியாய் வந்து அருளியாட்கொண்டது என மணிவாசகரும்3 கூறியிருத்தல் கண்டு இதன் பெருமையறியலாம்.

திருவைந்தெழுத்தே இறைவனது வடிவமாகும் என்பதனை 'அஞ்செழுத்துமே அம்மையப்பர் தமைக் காட்டுதலால்' என்னும் திருக்களிற்றுப் படியாராலும், ஓங்காரமே நல் திருவாசி உற்றதனில் நீங்கா எழுத்தே நிறை சுடராம்' எனவரும் உண்மை விளக்கத்தாலும் அறியலாம். இதுவே இறைவனது திருநாமமும் ஆகும் என்பதனைத் ''திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்'' என வரும் திருநாவுக்கரசர் வாக்காலும், ''எண்ணிலேன் உன் திருநாமத்தெழுத்து ஐந்தும் என் ஏழைமையானாலே'' எனவரும் மணிவாசகர் வாக்காலும் அறியலாம். தில்லைப் பெருமானின் திருவுருவத்தில் இவ்வைந்தெழுத்தும் விளங்கி நிற்கும் என்பதைச்

> "சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
> ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கில்
> இறைக்கு அங்கிநகரம் அடிக்கீழ் முயலகனார்
> தங்கும் மகரமது தான்."

எனவரும் உண்மை விளக்கத்தாலும் அறியலாம். அகாரம் முதலிய பிரணவ கலைகளே நமசிவாய எனும்

---

1 ''சிவாயநம என நீறணிந்தேன் தருவாய் சிவகதி''

2 ''நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே''

3 ''நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்''

திருவைந்தெழுத்தாக நிற்கும். இவை இரண்டும் சூக்கும பஞ்சாட்சரம் எனப்பெயர்பெறும். இம்முறையை அறிந்து இறைவனது அறிவாற்றலே தமது அறிவிற்கு முதலாக நிற்குமாற்றையும் உணர்ந்து அவ்வுணர்வு சலியாது நிற்பாயாக. இது உண்மைச் சிவயோகம் எனப்படும். துஞ்சாது – சலியாது துய்யபொருள் – உண்மையான சிவயோகம் என உரை காண்பர் திரு.சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள்.

11. **தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரன்**
நோக்கில் குழையும் என்று உந்தீபற
நோக்காமல் நோக்க என்று உந்தீபற.

வி-ரை: தாரணியில் இந்திர சாலம் புரிவோன் யாவரையும் தான் மயக்கும் தந்திரத்தில் சாராது சார்வது போல, எல்லாப் பொருள்களிலும் கலப்பினால் ஒன்றாகக் கலந்தும் பொருட்டன்மையால் கலவாது தனித்து நிற்பது பரம்பொருள் ஆகும். அப்பரம்பொருள் தன்னை நோக்குவார்க்கே இரங்கியருளும். அதனைத் தன்முனைப்பால் நோக்காது திருவருளையே கண்ணாகக் கொண்டு நோக்குக என்பதாம்.

இக்கருத்தினையே,

"ஆக்கப் படாத பொருளா யனைத்தினிலும்
தாக்கித்தான் ஒன்றோடும் தாக்காதே - நீக்கிபுடன்
நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய்
நிற்கை நிராதார மாம்."

"காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்றார் காட்சியறக் கண்ணுதலைக் - காண்கின்றார்
காண்பானும் காணப்படும் பொருளும் அன்றியே
காண்கையினாற் கண்டனரே காண்."

என்னும் திருக்களிற்றுப்படியார் பாடல்கள் விளக்கி நிற்கும். தன்–தனக்கு. பரன் – மேலானவன். எனவே உயிர்க்கு என்றும் மேலானவன் என்பது பொருளாம்.

12. மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியர் என்று உந்தீபற
தவத்தில் தலைவர்என்று உந்தீபற.

வி-ரை: உயிர்கள் கருவி கரணங்களின்றி மலத்தில் தொடக்குண்டு அதுவதுவாக நிற்கும் நிலைக்குக் கேவலம் என்று பெயர். அவ்வுயிர்கள் செய்த கன்மத்தைத் துய்த்துத் தொலைக்க இறைவன் கொடுத்த உடல், கரணங்களுடன் அவ்வுயிர்கள் வாழும் நிலைக்குச் சகலம் என்று பெயர். இவ்விருநிலையிலும் இருக்கும் உயிர்களைத்தான் 'மூலையிருந்தார்' எனக் குறிக்கின்றார் ஆசிரியர். இத்தகைய நிலையிலிருக்கும் உயிர்கள் அறியாமை நீங்கிச் சிவாநுபவத்தை நுகர்தற்கு ஞானாசிரியரின் திருவருளே இன்றியமையாததாகும். உயிர்கள் அறியாமை நீங்கிச் சிவாநுபவத்தை நுகரும் நிலைக்குச் சுத்தம் என்று பெயர். இந்நிலைக்கு ஆளாக்கிய ஞானாசிரியரே முற்றத்தே விட்டவர் எனப்படுவார். இவரே மிகவும் பெரியவர் ஆவார். இவரைத் தவத்தினாலேயே பெறுதற்கியலும் என்பதாம்.

'தவத்தில்' என்னும் ஐந்தனுருபை, ஏதுப் பொருளில்வரும் மூன்றனுருபாகத் திரித்து, வரும் என ஒருசொல் வருவித்து முடிக்க, ஈண்டுத் தவம்' என்பது சரியை முதலிய நெறிக்கண்நிற்றலைக் குறிக்கும். தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த என்னும் சிவஞான போதப் பகுதிக்கு விரிக்கப்படும் உரைகொண்டு இவ்வுண்மை அறியத்தகும். மாணிக்கவாசகப் பெருமானும் திருப்பெருந்துறையில் தம் குருமூர்த்தியைக் காண்பதற்கு 'நானேயோ தவஞ்செய்தேன்!' எனக் கூறுமாற்றானும் குமரகுருபரரும் ''பன்னாள் அலமருதல் கண்ணுற்றருளிக் குருபரன் என்றோர் திருப்பேர் கொண்டு'' எனக் கூறுமாற்றானும் ஞானாசிரியரைத் தவத்தினாலன்றிக் காண்டற்கியலாது என்னும் உண்மை நன்கு விளங்கும்.

மூலை முற்றம் என்பன குழூஉக்குறிபோலக் கருதப்பட்டு அவை முறையே மூலாதாரத்தையும் நிராதாரத்தையும் குறிக்கும் என்றும், மூலாதாரத்தில் மயங்கிக்கிடக்கும் உயிரை முறையாக

நிராதாரத்தில் செலுத்தித் திருவருளில் அழுந்திநிற்போரே சாலப் பெரியர் ஆவர்; அவரே தவத்தில் தலைவராவர் என்றும், நிராதாரம் செல்லும் அளவும் அலைந்து நிற்கும் உயிர் திருவருளால் அதன்கண் நிற்பின் அலைவற்று நிற்கும் என்றும் பொருள் கூறுவர். திரு.சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள்.

13. **ஓட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்**
தேட்டற் றிடம்சிவம் உந்தீபற
தேடும் இடமதன்று உந்தீபற.

வி-ரை: போக்கும் வரவும் புணர்வும் முதலாகிய ஒருவித அசைவும் அற்று, என்றும் ஒரு தன்மைத்தாய் விளங்கும் சிவபரம் பொருளைத் திருவருளே கண்ணாகக் கொண்டு அதனைத் தலைப்பட்டு வழிபடுதலின்றி அது இங்குள்ளது, அங்குள்ளது எனத் தேடுதற்குரிதன்றாம். அவரவர்தம்தம்முள் தாம் கண்டு வழிபடுதலின்றித் தேடிநிற்கும் இடம் அன்றாம் என்பதாம்.

ஓடுதல் அற்று என்பது 'ஓட்டற்று' என்றும் , தேடுதல் அற்று என்பது 'தேட்டற்று' என்றும் வந்தன. ஓடுதல் – அசைதல் . தேடுதல் – கவலுதல் [இங்கோ அங்கோ எனக் கவலுதல்].

"கவராதே தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே"
"தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என நாவரசரும்,

"முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்"

எனத் திருமூலரும், ' உணர்வில் நேர்வரும் சிவபோகம்' எனச் சேக்கிழாரும் தேட்டற்ற இடம் சிவம்'– என்பதை விளக்குதல் காணலாம். இக்கருத்தினையே,

"ஓட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்
தேட்டற்று நின்றஇடம் சிவமாம் - நாட்டுற்று
நாடும் பொருளனைத்தும் நானா விதமாகத்
தேடும்இடம் அன்று சிவம்"

எனவரும் திருக்களிற்றுப்படியாரும் நன்கு விளக்கும்.

14. கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி
உடந்தை யுடனேநின்று உந்தீபற
உன்னையே கண்டதென்று உந்தீபற.

வி-ரை: உயிரின்கண் எஞ்ஞான்றும் மறைந்திருக்கும் திருவருளை, ஞானாசிரியன் தன் தீக்கையினால் வெளிப்படுத்த அதன் வயமாகவே நின்று ஒழுகுவாயாக. அவ்வாறு ஒழுகுவது உன்னையே நீ முழுமையாகக் காண்பதாகும் என்பதாம்.

இறை என்றோ அன்றே உயிருமுள்ளது. அவ்வருள் உயிரின் கண் மறைந்து கிடப்பது. ஞானாசிரியன் தீக்கையால் உயிர் அதனை உணரும். கிடந்த கிழவி– உயிரின்கண் மறைந்து கிடந்த திருவருள். கிள்ளி எழுப்புதலாவது ஆசிரியன் தன் தீக்கையினால் அதனை வெளிப்படுத்தி உணரச் செய்வது ஆகும். உடந்தை– அத்திருவருளுடன் உன்னையே கண்டது என்பது மல இருளில் மயங்கி இருப்பது தனக்குரியது அன்று; திருவருள் வயத்தால் வெளிப்பட விளங்கி நிற்பதே தனக்குரியதாகும் என்று உணர்வதாகும்.

இதில் கிழவி என்பது குண்டலி சத்தியைக் குறிக்கும் என்றும், அது பலரிடத்தும் பாம்பு வடிவாய் வால் மேலாகத் தலையை மூலாதாரத்தில் வைத்து உறங்கும் என்றும், ஆதலால் அது கிடந்த கிழவி எனப்பட்டது என்றும், அதனை அவ்வாறு எழுப்பி அதனோடு ஒற்றறிந்து நிற்பதே உயிர் இயல்பை உள்ளவாறு உணருவதற்கு வழியாகும் என்றும் கூறுவர் திரு.சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்.

15. பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றில்அப்
பற்றை யறுப்பர் என்று உந்தீபற
பாவிக்க வாரார் என்று உந்தீபற.

வி-ரை: யான் எனது என்னும் அகப்புறப் பற்றுக்களை நீக்க வல்ல இறைமை இறைவனுக்கே யுண்டு. ஆதலின் இறைவனையே பற்றுக் கோடாகக் கொண்டு அவ்வகப்புறப் பற்றுக்களை நீக்குக. அவ்விறைவனையும் அவனது திருவருளாலேயே காண இயலுவதன்றிப் பாவனையால் எய்த இயலாது என்பதாம்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு".

என்னும் திருக்குறளும்,

"மற்றுப் பற்றெனக் கின்றிநின்திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மைவந் தெய்தினேன்"

என்னும் சுந்தரர் தேவாரமும், 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்னும் திருவாய்மொழியும், 'யான் எனது என்று அற்ற இடமே திருவடியா' என்னும் குமரகுருபரர் வாக்கும் ஈண்டு ஒப்பிட்டு உணர்தற்குரியனவாம். இக்கருத்தினையே,

"பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து
பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற - பற்றதனில்
பற்றுவிடில் அந்நிலையே தானே பரமாகும்
மற்றுமிது சொன்னேன் மதி".

என்னும் திருக்களிற்றுப்படியாரும் விளக்கி நிற்றல் காண்க.

16. உழவாது உணர்கின்ற யோகிகள் ஒன்றோடும்
தழுவாமல் நிற்பர்என்று உந்தீபற
தாழ்மணி நாவேபோல் உந்தீபற.

வி-ரை: உலகியற் சூழலிற் கருத்தைச் செலுத்தாது, திருவருளையே உணர்ந்து அநுபவிக்கும் யோகிகள், தமக்கு ஒரோவழி இன்ப துன்பங்கள் எய்தினும் அவற்றிற்காக மனந்தளரமாட்டார்கள். அங்ஙனம் அவர்கள் அசைவற்றிருப்பார்கள் என்பதாம். நன்றாங்கால்

நல்லவாக்காணின், அன்றாங்கால் அல்லற்பட வேண்டும். இன்பத்துள் இன்பம் விழையாதிருப்பின், துன்பத்துள் துன்பம் உற வேண்டிய அவசியம் இல்லை. இத்தகைய உறுதிப்பாடு திருவருள் வலிமையினாலேயே கிட்டும்.

> "பொல்லாத தீவினையிற் போகார்கள் போனாலும்
> எல்லாம் சிவன்செயலே என்றிருப்பர்"

என்னும் சிவபோகசாரமும் ஈண்டு நினைவு கூர்தற்குரியதாகும்.

இக்கருத்தினையே,

> "அறிவறிவாய் நிற்கில் அறிவுபல வாமென்று
> அறிவின் அறிவவிழ்த்துக்கொண்டு அவ் - வறிவினராய்
> வாழ்ந்திருப்பர் நீத்தவர்கள் மானுடரின் மாணவக !
> தாழ்ந்தமணி நாவேபோல் தான்".

என்னும் திருக்களிற்றுப்படியாரும் விளக்கி நிற்றல் காண்க.

ஆதார யோகங்களில் உழலாது நிராதாரத்தில் திருவருளையே உணர்ந்து நிற்கின்ற யோகியர்கள் உலகத்தார் போல ஒழுகினார் ஆயினும் ஒன்றையும் தம் செயலாகக் கொண்டு ஒழுகாமல் எல்லாவற்றையும் சிவன் செயலாகவே கொண்டு ஒழுகுவார்கள். அதனால் தரையில் வைக்கப்பட்ட மணியின் நாக்குப் போல அவர்களது உயிர் அறிவும் செயலற்றுக் கிடக்கும் என உரை காண்பர் திரு.சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்.

17. திருச்சிலம்பு ஓசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென்று உந்தீபற
நேர்பட அங்கேநின்று உந்தீபற.

வி-ரை: மக்கள், குலம், கல்வி, வைத்த, நிதி, பெண்டிர் என்பனவற்றைத் தேடியும் நுகர்ந்தும் வரும் வாயிலாக ஏற்படும் ஆரவாரத்தை விடுத்துத் திருவருளே கண்ணாகக் கொண்டு வழிபட்டுவரின், ஆனந்தக் கூத்தனின் திருச்சிலம்போசை

கேட்கும் அவ்வொலி வழியே சென்று வழிபடுக. அவ்வாறு வழிபடுவது கூத்தப்பெருமானின் முன்னின்று வழிபடுவதாகும் என்பதாம்.

உயிர்கள் தாம் விரும்பியவாறே பொறிவழிச் சென்று நுகருதலை மயக்கநெறி என்றும், அம்மயக்க நெறியினின்றும் நீங்கி இறைவனது திருவடியைச் சார நினைதலே நன்னெறி என்றும், கூறப்படும். இங்ஙனம் நன்னெறிக்கண் தலைப்பட்டு இறைவனைச் சார அணையும் உயிர்களை, அவனது பரநாதம் என்னும் சிலம்பு ஆரவாரித்து வரவேற்கும். அரசிளங்குமரன் ஒருவன், தனது பகைவனை அழித்துவிட்டுத் தனது நகருக்குச் செல்லின், தனது தந்தையாம் பேரரசனும், அவனது இயங்கீளும் மிக்க மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ளுமாறுபோல் உயிர்களும் தமக்குப் பகைவராயுள்ள ஐம்புல வேடர்களையும் ஓட்டித் தமது தந்தையாம் இறைவனது திருவடியை அணுகின், அவ்விறைவனும், அவனது திருச்சிலம்பும் மகிழ்ச்சியுடன் ஏற்று அவ்வுயிர்களைப் பாராட்டும் என்பதாம். இங்ஙனம் இறைவனது திருமுன்னிலையிலே இருக்கும் உயிர்களை, ஐம்புல வேடர்கள் மீண்டும் வந்து தாக்கார்.

'என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே' என்னும் திருவாக்கும் , சேரமான் பெருமான் நாயனாரின் அநுபவமும் இவ்வுண்மையை விளக்கி நிற்பனவாம்.

"ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலம் குருபரன் கொண்டாடத்
தேடியுளே கண்டு தீர்ந்தற்ற வாறே."

என்னும் திருமந்திரமும்,

"ஓசையெலாம் அற்றால் ஒலிக்கும் திருச்சிலம்பின்
ஓசைவழி யேசென் றொத்தொடுங்கில் - ஓசையினில்
அந்தத்தா னத்தான் அரிவையுடன் அம்பலத்தே
வந்தொத்தான் அத்தான் மகிழ்ந்து."

என திருக்களிற்றுப்படியாரும் இதனோடு ஒப்பிட்டு உணர்தற்குரியன.

இது நிராதாரத்திலிருந்து மீதானத்துக்குச் செல்லும் முறையைக் கூறுகின்றது என்றும், நிராதாரத்தில் திருவருளை இடையீடின்றித் தலைப்பட்டு நிற்ப, இறைவனின் திருச்சிலம்பு ஓசை கேட்கும் என்றும், அவ்வோசையின் வழியே மீதானத்தில் சென்று நிராதாரத்தில் ஒரு தாளை ஊன்றி மீதானத்தில் மற்றொரு தாளைத் தூக்கி ஆடுகின்ற கூத்தப்பெருமானை இனிது கண்டு வழிபட இயலும் என்றும் கூறுவர் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்.

18. **மருளும் தெருளும் மறக்கும் அவன்கண்**
அருளை மறவாதே உந்தீபற
அதுவே இங்குள்ளதென்று உந்தீபற.

வி-ரை: மேற்கூறியவாறு இறைவன் திருமுன்னிலையில் நின்று நேர்படக் கும்பிட்டவர்களுக்கு அறியாமை, அறிவு என்ற இரண்டும் நீங்கும். இங்ஙனம் உள்நின்றுணர்த்தி ஓவாது இன்பமளிக்கும் திருவருளை மறவாது போற்றுவதே இவ்விடத்துச் செய்யத்தக்கது என்பதாம்.

மருள் என்பது அறியாமையைக் குறிக்கும். 'அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல்லறிவே' என்பவாகலின் இறைவனது திருமுன்னிலையில் இம்மருள் கதிரவனைக் கண்ட பனியென நீங்கும் என்பதாம். அடுத்து அறிவு நீங்கும் என்றது இறைவனையன்றிப் பிறவற்றையும் அறிவு நீங்கும் என்பது போதர நின்றது.

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம் - சார்பு
கெடவொழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று."

என்னும் திருக்களிற்றுப்படியார் இதனொடு ஒப்பிட்டு உணர்தற்குரியது.

19. **கருது வதன்முன் கருத்தழியப் பாயும்**
ஒருமகள் கேள்வனென்று உந்தீபற
உன்ன அரியனென்று உந்தீபற.

வி-ரை: தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்பன் இறைவன் ஆதலின், உயிர் அப்பெருமானை நினையும் பொழுதே அவன் அதனையும் அதனது கருத்தினையும் தனதாக்கிக் கொண்டு தானும் தனது கருத்துமே முன்னிற்பதாக ஆக்குவன். அத்தகைய கருணைப் பெருவெள்ளம் உடையன் என்பதை அறிவிக்கவே அவனும் உமையொரு கூறனாய் நின்று உயிர்களுக்குக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றான். அப்பெருமானை அவனது திருவருள் கொண்டே நினைந்து மகிழ்வதன்றி உயிர்கள் தம்மறிவு அதனால் காணும் தகைமையன் அல்லன் என்பதாம்.

"அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்கும் - சென்று
கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும்
ஒருமகள்தன் கேள்வன் உனக்கு.

என்னும் திருக்களிற்றுப்படியார் இப்பாடலை முகந்து நின்று விளக்குதல் காணலாம்.

20. **இரவு பகல்இல்லா இன்ப வெளியூடே**
விரவி விரவிநின்று உந்தீபற
விரைய விரையநின்று உந்தீபற.

வி-ரை: உயிர் ஆணவத்தோடு கூடி வாழும் நிலையை இரவு என்றும், மாயையுடன் கூடிவாழும் நிலையைப் பகல் என்றும், கூறுப, இவ்விரு நிலையையும் விடுத்துப் பேரின்ப வடிவினனாகிய இறைவனோடு உயிர்கள் கூடிவாழ்தலையே ஈண்டு 'இன்ப வெளியூடு விரவுதல்' என்று கூறப்படுகின்றது. இங்ஙனம் உயிர்கள் இன்பவெளியில் கலந்து நிற்கும்பொழுது, உலகியற்பொருள்களிற் கருத்தினைச் செலுத்தி, அவ்வின்பத்தினைப் பின்னர் துய்த்துக் கொள்வோம் என்றிராமல், இடைவிடாது அவ்வின்ப நுகர்விலேயே கருத்தினைச் செலுத்த வேண்டும் என்பதாம்.

உயிர்களால் அளவின்றி யீட்டப்பட்ட வினைகளைத் துய்த்துத் தீர்ப்பதற்கே கருவி கரணங்களோடு கூடிய உடல்

தரப்படுகின்றது. அங்ஙனம் அவ்வினைப்பயன்களைத் துய்த்துத் தீர்த்த பின், இறையருளோடு கூடும் இன்ப அநுபவம் கிட்டுகின்றது. அத்தகைய பேரின்பத்தைத் தலைப்பட்டும், உலகியற் பொருள்களில் கருத்தைச் செலுத்தினால், அவ்வின்ப அநுபவம் தவறுவதோடு, மீண்டும் அது கிடைக்காது போய்விடும் என்பதாம்.

இவ்வின்ப வெளியில் விரவுதற்கு உயிர்கள் அனைத்தும் விரையவேண்டும் என்பதையே திருவாசகத்தில் ' புணர்ச்சிப் பத்து'' என்னும் பகுதியில் மாணிக்கவாசகர் மிகவும் அழகாக எடுத்துக் கூறுகின்றார்.

''நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்று கொல்லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே''

இப்பகுதி திருவருளின்பம் எத்தகையது என்பதையும் அதனை அடைவதற்கு அடிகள் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் நன்கு விளக்குகின்றது.

இரவு பகல், இன்பம் என்னும் முத்திறத்திலும் உயிர்கள் பெறும்அநுபவத்தையும், அதனைத் திருவருள் இயைவிக்குமாற்றையும் தாயுமானார் மிக அழகாக விளக்குகின்றார். அப்பாடல் வருமாறு:-

காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப் போல்
கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட்(டு) அல்லலாம்
காப்பிட்(டு) அதற்கி சைந்த
பேரிட்டு மெய்யென்று பேசும்பாழ்ப் பொய்யுடல்
பெலக்கவிளை யாட்ட மைத்திட்(டு)
ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பின் நமனைவிட்(டு)
இடருற வுறுக்கி யிடர்தீர்த்(து)
இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில் கொண்மி னென்று

சீரிட்ட வுலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

21. சொல்லும் பொருள்களும் சொல்லா தனவு(ம்) அங்கு
அல்லனாய் ஆனான் என்று உந்தீபற
அம்பிகை பாகன் என்று உந்தீபற.

வி-ரை: சொல்லத்தக்க உள் பொருள்களும், சொல்லற்கியலாத இல்பொருள்களும், இவையிரண்டும் அல்லாத பொருளும் ஆய் நிற்பது எது? அதுவே பரம்பொருள் ஆகும். அத்தகைய பரம்பொருள் நம்மனோர் பொருட்டு எளிவந்து அருள் செய்யுமோ எனில் கருணையே உருவாகக் கொண்டிருக்கும் சத்தியைத்தன் இடமருங்கில் வைத்துக்கொண்டிருக்கும் சீலம் உடையது ஆதலால் எளிவந்து அருள் செய்யும் என்பதாம்.

இறைவன் மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனாய் இருப்பினும், அடியார்கள் சிந்தனையுள் தேனூறி நின்று, அவர்களுக்கு அருள வல்ல கருணைப் பெருக்கும் உடையன் என்பதாம்.

இறைவன் பிறர்க்குச் சொல்லப்படும் பருப்பொருள்களாகவோ, யோகியர்தம் உள்ளத்தால் மட்டுமே உணரப்படும். நுண்பொருள்களாகவோ மட்டும் விளங்குபவன் அல்லன். அனைத்துப் பொருளாகவும் நிறைந்து நிற்பவனாயினும் உயிர்கள் மாட்டு வைத்த கருணையால் உமையொரு கூறனாய் நின்று ஆட்கொள்வன் என உரை கண்டு, நிராதார யோகிகட்கு மட்டுமின்றி ஆதார யோகியர், கிரியையாளர், சரியையாளர், ஆகிய பிறர்க்கும் அவரவர்க்கு ஏற்ற வகையில் அவனது அருள் கிட்டும் என விளக்கம் காண்பர் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்.

22. காற்றினை மாற்றிக் கருத்தைக் கருத்தினுள்
ஆற்றுவ தாற்ற(ல்) என்று உந்தீபற
அல்லாத(து) அல்லவென்று உந்தீபற.

வி-ரை: வெளிவந்து இயங்கும் மூச்சுக் காற்றினைக் குருவருளால் உள்ளே அடக்கி ஒன்றியிருந்து நினையின் மன ஒருமைப்பாடு ஏற்படும். இதுவே ஆற்றல் எனப்படும். இத்தகைய ஆற்றலாலேயே இறைவனை அடைந்து மகிழ இயலும். இதுவல்லாத பிற நெறிகளால் அடைதற்கியலாது என்பதாம்.

இறைவனை நினைத்தற்கு 'ஒரு நெறிய மனமும்' அவனை வழிபடும் பொழுது 'ஒன்றியிருந்து நினைத்'தலும் வேண்டும். இதற்குக் காற்றினை மாற்றிக் கணக்கறியும் இப்பட்டறிவு இன்றியமையாது வேண்டும். இது குருவருளால் பெறத்தக்கதாம்.

23. **கள்ளரோ(டு) இல்லம் உடையார் கலந்திடில்**
வெள்ள வெளியாமென்று உந்தீபற
வீடு(ம்) எளிதாமென்று உந்தீபற.

வி-ரை: களவு காண்பான் ஒருவன், மிகுந்த பொருளுடையவன் மாட்டுச் சென்றால் அவனது பொருளைக் கைப்பற்ற அவனை மந்திரத்தாலோ அன்றி மருந்தினாலோ தன் வயப்படுத்திய பின்பே களவாடுவான். அதுபோல இயல்பாகவே பாசங்களையுடைய உயிர்களுக்குக் காண்டற் கரியனாய்[கள்வனாய்] இருப்பன். பின் இருவினையொப்பும் மலபரிபாகமும் வந்த விடத்து உடல் என்னும் வீட்டினைப் பெற்றிருக்கும் உயிர்களைத் திருவைந்தெழுத்து என்னும் மந்திரத்தாலும், திருநீறு என்னும் மருந்தினாலும் தன்வயமாகச் செய்து, அவ்வுயிர்களினிடத்து நின்ற மலங்களை இறைவன் என்னும் கள்வன் கவர்ந்து விடுவான். அப்பொழுது அவ்வுயிர்களுக்குச் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாய வீடும் எளிதில் கிடைக்கும் என்பதாம்.

உயிர்களுக்கு இருவினையொப்பு வரும் வரையினும் இறைவன் மறைந்து நின்று அருள் செய்தலின் அவ்விறைவனைக் கள்ளர் என்றார். இறைவனைக் கள்ளன் என்னாது கள்ளர் என்றது அத்தொழிலின் அருமையையும் பெருமையையும் குறிக்கவேயாம். உலகத்துக் கள்வர் தன்னலத்திற்காகப் பிறர் பொருளைக் கவர்வர். இறைவனோ

உயிர்களின் நலத்திற்காக இந்நிலையை மேற்கொள்கின்றான். உலகத்துக் கள்வர் தமது இன்றியமையாமையின் பொருட்டுப் பிறருக்கு இன்றியமையாதிருக்கும் பொருள்களைக் கவர்வர். இறைவனோ தனக்கும் உயிர்களுக்கும் வேண்டாத மலங்களினின்றும் நீக்க இத்தொழிலை மேற்கொள்கின்றான். உலகத்துக் கள்வரை நாமே வருந்தித் தேடிக் கண்டாலன்றி, அவர்களே முந்துற வருவதில்லை. ஆனால் இறைவனோ அன்பால் நினைவார்களது உள்ளக்கமலத்தின் கண்ணே அவர்கள் நினைந்த வடிவோடு விரைந்து வரும் இயல்பினன். இத்தகைய அருமையும் பெருமையும் உளவாதலை நினைந்தே இறைவனைக் கள்ளர் என்றார்.

இல்லம் உடையார் – உயிர்கள்

24. எட்டுக் கொண் டார்தமைத் தொட்டுக்கொண்டே நின்றார்
விட்டார் உலகம் என்று உந்தீபற
வீடே வீடாகும் என்று உந்தீபற.

வி-ரை: விண், மண், நீர், தீ, வளி, மதி, கதிரவன், உயிர் என்ற எட்டினையுமே திருமேனியாகக் கொண்டிருக்கும் இறைவனை, இடைவிடாது நினைந்து கொண்டேயிருப்போர்களுக்கு உலகியற் சூழல் தோன்றாது. உலகியல் சூழலாவது தான் அல்லாததனைத் தான் என்றும், தன்னுடையது அல்லாததனைத் தன்னுடையது என்றும் கருதும் கருத்தாகும். இவ்விரண்டனையும் விட்டுவிட்டால் அதுவே வீடாகும் என்பதாம்.

'யான் எனது என்று அற்ற இடமே திருவடியா' என்னும் குமரகுருபரரின் வாக்கும் ஈண்டு நினைவு கூர்தற்குரியது. திருநாவுக்கரசு சுவாமிகள் 'எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக் கொண்டே நின்றவர்' என்னும் வாக்கால் நன்கறியலாம். இத்தகைய நற்சிந்தையினால்தான் 'விட்டார் உலகம்' என்பதற்கேற்ப அவர்தம் வாழ்வு விளங்கலாயிற்று.

25. சித்தமும் தீய கரணமும் சித்திலே
ஒத்ததே ஒத்ததென்(று) உந்தீபற
ஒவ்வாத(து) ஒவ்வா(து) என்(று) உந்தீபற.

வி-ரை: உயிரும் அந்தக்கரணங்களும் தத்தமக்குரிய உணர்ச்சியை விடுத்துத் திருவருளுணர்ச்சியில் அடங்கி ஒன்றுபடுதலே வீடு அடைதற்கு ஒத்த நிலையாம். அவ்வாறு ஒவ்வாத நிலை வீடடைதற்குப் புறம்பு என்பதாம்.

செத்தாரே கெட்டார்கரணங்கள் சேர்ந்(து) அதனோ(டு)
ஒத்தாரே யோகபரர் ஆனவர்கள் -எத்தாலும்
ஆராத அக்கரணத்(து) ஆர்ப்புண்டு இங்(கு) அல்லாதார்
பேராமல் செல்வரதன் பின்.

எனவரும் திருக்களிற்றுப்படியாரும் இக்கருத்தினையே விளக்கி நிற்கும்.

26. **உள்ளும் புறம்பும் நினைப்பறின் நின்னுள்ளே**
மொள்ளா அமுதாம் என்(று) உந்தீபற
முளையாது பந்தம் என்(று) உந்தீபற.

வி-ரை: அகவழிபாடும், புறவழிபாடும் ஒழிந்த அகண்ட வழிபாட்டில் உலவாத இன்பம் உண்டு. அத்தகைய வழிபாடு ஆற்றுவோர்க்கு இருள்சேர் இருவினையும் சேரா என்பதாம்.

புறத்தியற்றும் வழிபாட்டினைத் தாதமார்க்கம் [சரியை] என்றும், அகத்தியற்றும் வழிபாட்டினைச் சதமார்க்கம் [யோகம்] என்றும், அவ்வீரிடத்தும் இயற்றும் வழிபாட்டிலனைச் சற்புத்திர மார்க்கம் [கிரியை] என்றும், அகண்ட வழிபாட்டினைச் சன்மார்க்கம் [ஞானம்] என்றும் கூறுவர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன சங்கரனை அடையும் நன்மார்க்கங்கள் ஆகும். இவற்றின் விளக்கங்களைச் சிவஞான சித்தியார் [சுபக்கம் 271] முதல் 274 வரையுள்ள பாடல்களாலும், 'நிலைபெறுமாறு எண்ணுதியேல்' என்றற்றொடக்கத்துத் திருமுறைகளாலும் நன்கு அறியலாம்.

உயிர்கட்கு அகம், புறம் என்னும் வரையறை உணர்வு நீங்கி, எல்லையற்ற பரந்த உணர்வு உண்டாயின், புதிதாக அடையாது இயல்பிலே அவற்றிற்கு உள்ள பேரின்பம் அனுபவமாகிவிடும் பின்பு வினைத்தொடக்கும் இல்லையாம்.

ஆகவே, பிறப்பும் இல்லை என உரை காண்பர் திரு.சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்.

இதனை,

'உள்ளும் புறம்பும் நினைப்பொழியின் உன்னிடையே
வள்ளல் எழுந்தருளும் மாதினொடும் - தெள்ளி
அறிந்தொழிவாய் அன்றியே அன்புடையை யாயின்
செறிந்தொழிவாய் ஏதேனும் செய்'.

என்னும் திருக்களிற்றுப்படியாரும் நன்கு விளக்கும்.

27. அவிழ இருக்கும் அறிவுடன்நின் றவர்க்கு
அவிழும் இவ் வல்லல் என்(று) உந்தீபற
அன்றி அவிழா(து) என்(று) உந்தீபற.

வி-ரை: இறைவன் எல்லாப் பொருள்களிலும் கலந்திருப்பினும் பொருள் தன்மையால் அவற்றின் வேறாகவும் விளங்கி நிற்கின்றான். அத்தகைய இறைவனது திருவருளைத் துணையாகக் கொண்டவர்களுக்குப் பிறவித் துன்பங்கள் தோன்றா. அத்தகைய துணையின்றேல் அவை நீங்கா என்பதாம்.

அவிழ இருக்கும் அறிவு-எல்லாப் பொருள்களிலும் பற்றற்ற நிலையில் [வேறாக] இருக்கும் இறைநிலை. திருவருள் துணையினால் அல்லது அல்லலை வெல்லல் இயலாது.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.
"வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

என்னும் திருவாக்குகளும்,

"அல்லல் என்செய்யும் அருவினை என்செய்யும்"
"குணங்கள் தாம் இல்லா இன்பமே! உன்னைக்
குறுகினேற்(கு) இனியென்ன குறையே."

என்னும் திருவாக்குகளும் இவ்வுண்மையை நன்கு வலியுறுத்துவனவாம்.

நிராதாரத்தின்வழி மீதானத்திற் சென்று சிவனை உணர்ந்தவர்க்கும் அவ்வுணர்வு அவன் மாட்டு நெகிழ்ந்து உருகும் அன்பாய் வளர்ந்த வழியே மலங்களால் உளவாகும் அல்லல்கள் நீங்கும். அங்ஙனம் வளராவிடின் அவ்வல்லல்கள் நீங்க மாட்டா என உரைகாண்பர் திரு.சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்.

**28. வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர்
பித்தேறி னார்கள் என்(று) உந்தீபற
பெறுவ(து) அங்(கு) என்பெணே உந்தீபற.**

வி-ரை: முத்திக்கு வித்தாக இருக்கும் திருவருளினாலே பிறப்பு இறப்பிற்கு விளைவாக இருக்கும் பாசங்களினின்றும் நீங்கியவர்களே திருவருள் தோய்வுடையவர்கள் ஆவர். அத்தகைய பேற்றினும் பெறத்தக்க பேறு வேறுயாதுளது! ஒன்றுமில்லை என்பதாம்.

பெண்ணே என்னும் விளி, பெணே என நின்றது. இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிய இறையருளின் துணை கொண்டு இயல்பாகவே பாசங்களையுடைய உயிர்கள் ஈடேற வேண்டும் என்பதாம்.

ஞானம், வித்தும், அன்பு, அதில் முளைத்து வளரும் பயிரும் ஆகும். ஆகவே ஞானம் அன்பாக வளரப் பெறாதவர் வித்தைப் பெற்றும் முளையை விடுத்தவராவர். அதனால், அவரது நிலை மயக்க நிலையேயாம். ஆகையால் அவர் இதுகாறும் செய்த செயல்களால் பெறுவது யாது! ஒன்றுமில்லை என்பதாம்.

ஒருவன், ஒருத்தி என்னும் இருவர் ஒருவரை ஒருவர் காட்சியால் காண்பது போல்வது ஞானம். கண்டபின் காதல் தோன்றி மிகுதல் போல்வது அன்பு. காதல் இல்வழி அவ்விருவரது காட்சியால் பயன் இன்மை அறியத்தக்கது என

விளக்கம் காண்பர் திரு.சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்.

29. **சொல்லும் இடமன்று சொல்லப் புகுமிடம்**
எல்லை சிவனுக்(கு) என்(று) உந்தீபற
என்றால்நாம் என்செய்கோம் உந்தீபற.

வி-ரை: சிவபரம் பொருளைக் கூடுகின்ற இடம் இது எனச் சொல்லுதற்கு இயலாது ஞானாசிரியனால் உணர்த்த உணரும் இடமே [ஞானமே] அப்பரம்பொருளை அடைதற்குரிய இடமாம். அங்ஙனமிருக்க அவ்விடத்தை எவ்வாற்றான் விளங்கச் சொல்ல முடியும்? முடியாது என்பதாம்.

எனவே, 'பதிஞானம்' எனப்படும் அவன் அருளைப் பற்றுக்கோடாகப் பற்றியே அவனை உணர்தல் வேண்டும். அவ்வுணர்வை அடையப்பெறாதவர் அதன் விளைவாகிய அன்பைப் பெறுதல் எவ்வாறு கூடும்?

30. **வீட்டில் இருக்கில் என் நாட்டிலே போகில்என்**
கூட்டில்வாள் சாத்திநின்று உந்தீபற
கூடப்படாததென்று உந்தீபற.

வி-ரை: உயிராகிய கூட்டில் ஞானமாகிய வாளினைக் குருவருளால் நிலைநிறுத்தி, அதன் செயலே தன் செயலுக்குக் காரணம் என்பதை உணர்ந்து வாழ வேண்டும். இந்நிலை கைவரப் பெறாது துறவறத்தில் நிற்பினும், இல்லறத்தில் நிற்பினும் யாதும் பயனில்லை என்பதாம். தன் செயலெல்லாம் இறைவன் செயலால் நிகழ்வது என்பதைத் தெரிந்து கொள்ளாராயின் வீடு அடைய முடியாது என்பதாம்.

எல்லாவற்றையும் தன்னாலே விடப்பட்டு நிற்றலின் வீடு என்பது துறவறமாயிற்று. இருந்தோம்பி இல்வாழ்தல் நாட்டிலே ஆதலின் அது இல்லறமாயிற்று. கூடு என்பது உயிராகி கூட்டினைக் குறித்தது. வாள்-ஒளி; அது ஈண்டு ஞானத்தினை உணர்த்திற்று. 'ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப்பறையறைமின்' என்னும் திருவாக்கும் காண்க.

"வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றாலும்
நாட்டிலே நல்வினைகள் செய்தாலும் கூட்டில்வாள்
சாத்தியே நின்றிலையேல் தக்கனார் வேள்விசெய்த
மாத்திரமே யாம்கண்டாய் வந்து"

என்னும் திருக்களிற்றுப்படியாரும் இக்கருத்தினை விளக்கி நிற்றல் காண்க.

ஆன்ம போதம் வாளும், திருவருள் உறையும் போன்றனவாம். ஆகவே அந்த வாளினை அந்த உறையுள் வைத்துவிட்டுச் செயலற்றியிறாதவர்கள் இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்ந்தால் என்? உடம்பும் மிகையாகத் துறந்து எங்கும் திரிந்தால் என்? [பயன் யாதுமில்லை என்றபடி].

31. **சாவிபோம் மற்றைச் சமயங்கள் புக்குநின்(று)**
ஆவிய றாதேயென்(று) உந்தீபற
அவ்வுரை கேளாதே உந்தீபற.

வி-ரை: பயனுடைய நெல்லைப் போல் காணப்பட்டு, முடிவில் பதராகத் தெரியும் சாவியனைய பிற பிறசமயங்களிற் சென்று, உயிர்க்குயிராகிய சிவபரம் பொருளை இழந்துவிடுதல் கூடாது. எனவே அவ்வச் சமயத்தவர் கூறும் கருத்துக்களை வினையில் வென்று விடுத்தல் தக்கது என்பதாம்.

பயனில் சொல் பாராட்டுவானைப் 'பதர்' என்றாற் போலப் பயனில் கருத்துக்களைக் கூறும் சமயங்களையும் பதர் என்றார். சாவி-பதர். நெல்லில் பதரானவற்றைச் சாவி எனல் வழக்கினுள்ளும் காணப்படுவதாகும். ஆவி-உயிர்க்குயிராகிய சிவபரம் பொருள்.

நாவரசர், தாம் சமண சமயம் புக்குநின்ற காலத்தை நினைந்து நினைந்து வருந்துவதை அவர்தம் பாடல்களில் பல்வேறிடத்தும் காணலாம். அந்நாட்கள் எல்லாம் தாம் பிறவாத நாட்கள் என்றே கருதினர். அவ்வநுடவ வாக்கில் ஒன்று காண்க.

"பல்லுரைச் சமணரோடே பலபல காலம் எல்லாம்
சொல்லிய செலவு செய்தேன் சோர்வன்நான் நினைந்த போது
மல்லிகை மலரும் சோலைத் திருவையா(று) அமர்ந்த தேனை
எல்லியும் பகலும் எல்லாம் நினைந்தபோ தினிய வாறே.

32. துரியம் கடந்தஇத் தொண்டர்க்குச் சாக்கிரம்
துரியமாய் நின்றதென்(று) உந்தீபற
துறந்தார் அவர்களென்(று) உந்தீபற.

வி-ரை: தன்னுணர்ச்சியையும் உலகியலுணர்ச்சியையும் கடந்த ஞானியர்கள் இறைவனையே கண்டிருப்பார்கள். அந்நிலை ஒரோவழி நீங்கி உலகியல் நினைவுவரினும் அவற்றையும் திருவருட் குணமாகவே நினைவர். இவர்களே மேலான ஞானிகளாவர் என்பதாம்.

துரியம் இரண்டனுள் முன்னையது தன்னுணர்ச்சியையும் [தற்போதம்], பின்னையது இறையுணர்ச்சியையும் [சிவபோதம்] குறிக்கும். சாக்கிரம்–நனவு. பேரருளாளர்களுக்கு இறையுணர்ச்சியே மேலிட்டிருக்கும். உலகியலுணர்வு ஒரோவழிவரினும் அதன் கண்ணும் திருவருட் குணத்தையே காண்பர் என்பது இதன் கருத்தாகும். இவர்களின் பெருமையைச்

"சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகில்
சருவசங்க நிவர்த்திவந்த தபோதனர்கள் இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுஎன்? இம்மையிலே உயிரின்
பற்றறுத்துப் பரத்தையடை பராவுசிவ ரன்றோ
ஆக்குமுடி கவித்(து) அரசாண்(டு) அவர்கள் அரிவையரோ(டு)
அனுபவித்(து) அங்(கு) இருந்திடினும் அகப்பற்(று) அற்(று) இருப்பர்
நோக்கியிது புரியாதோர் புறப்பற்(று) அற்றாலும்
நுழைவர்பிறப் பினில் வினைகள் நுங்கி டவே."

என்னும் சித்தியார்ப் பாடலும் நன்கு விளக்கும். இத்தகைய சிவஞானியர்களைக் கொண்டே இறைவனும் சாப அருள்களை உயிர்களுக்கு நல்கி அவற்றை ஈடேறச் செய்வான் எனத் திருக்களிற்றுப்படியார் விளக்குகின்றது. அப்பாடல் வருமாறு:–

"துரியம் கடந்த சுடர்த்தோகை யுடன் என்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் - துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யும் தன்மைகளும்
ஆக்குவிப்பன் அன்பர்க் கவன்."

33. பெற்ற சிற்றின்பமே பேரின்ப மாம்அங்கே
முற்ற வரும்பரிசு உந்தீபற
முளையாது மாயை என்(று) உந்தீபற.

வி-ரை: மேற்கூறப்பட்ட ஞானியர்களுக்கு ஏன்ற வினையால் [பிராரத்துவம்] நிலையற்ற இன்பங்களை அநுபவிக்க நேரினும் அவர்களது எண்ணமும் கருவிகளும் இறையுணர்ச்சியிலேயே இருப்பதால் அவ்வின்பங்களும் பேரின்பங்களேயாகும். இங்ஙனம் ஏன்றவினை உடலோடு ஏகவே, இனி ஏறும் வினையும் [ஆகாமியம்] திருவருள் மேலீட்டால் வாராமல் போகும். பிறந்த உடம்பால் முகந்து நின்றன போக எஞ்சிய வினையும் [சஞ்சிதம்] குருவருளால் முன்னமே நீங்க, இங்ஙனம் மும்மைதரும் வினைகளும் ஞானியர்களுக்கு முளாவாயிற்று. எனவே அவர்களுக்கு இனிவரும் பிறவியும் இல்லை என்பதாம்.

"ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைத்தே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும்இறை ஞானம்
கூடுமவர் கூடரிய வீடும் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே யிருப்பர்"

என்னும் சித்தியார் பாடலும்,

"தென்னாவ லூர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்
மின்னாரும் கொடிமருங்குல் பரவையெனும் மெல்லியள்தன்
பொன்னாரும் முலைஓங்கல் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினார்"

என்னும் திருத்தொண்டர்புராணமும் இக்கருத்தினை வலியுறுத்தி நிற்றல் அறியலாம்.

"உடம்புடைய யோகிகள் தாம்உற்ற சிற்றின்பம்
அடங்கத்தம் பேரின்பத்து ஆக்கில்- தொடங்கி
முளைப்பதும் ஒன்றில்லை முடிவதும் ஒன்றில்லை
இறைப்பதும் ஒன்றில்லை யிவர்"

என்னும் திருக்களிற்றுப்படியாரும் இத்திருவுந்தியார் கருத்தினை விளக்கி நிற்றல் காண்க.

34. பேரின்ப மான பிரமக் கிழத்தியோடு
ஓரின்பத் துள்ளான்என்(று) உந்தீபற
உன்னையே ஆண்ட(து) என்(று) உந்தீபற.

வி-ரை: பேரின்பமான பெருந்தலைவியோடு கூடியிருக்கின்றவனும், ஒப்பற்ற இன்பவடிவினனாக இருக்கின்றவனுமான இறைவனே ஞானியர்களை ஆட்கொண்டு அருள் செய்கின்றான் என்பதாம்.

பிரமக்கிழத்தி–இறைவி. ஓரின்பத்துள்ளான்– இறைவன். இறைவன் இன்பமே வடிவாக விளங்குபவன். 'அவர்க்கு உருவம் இன்பகனம்' என்னும் திருவருட்பயன். 'ஈறிலாப்பதங்கள் யாவையும் கடந்த இன்பமே' என்னும் திருவாசகம். 'சத்தி பின்னம் இலான் எங்கள் பிரான்' என்றும், 'அம்மையோடு அப்பனாகிச் செறிவு ஒழியாது நின்ற சிவன்' என்றும் பிற ஆசிரியர்கள் கூறுவது போலவே இவ்வாசிரியரும் 'பிரமக்கிழத்தியோடு ஓரின்பத்து உள்ளான்' என்றார். இக்கருத்தினையே

"பேரின்ப மான பிரமக் கிழத்தியுடன்
ஓரின்பத் துள்ளானை உள்ளபடி - பேரின்பம்
கண்டவரே கண்டார் கடலுயிர்த்த இன்னமுதம்
உண்டவரே உண்டார் சுவை."

என்னும் திருக்களிற்றுப் படியாரும் நன்கு விளக்கும்.

35. பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக்
கண்டாரே கண்டார் என்(று) உந்தீபற
காணாதார் காணார் என்(று) உந்தீபற.

வி-ரை: பேய் பிடிக்கப்பட்ட பெண்டிர்போல உயிரையும் அப்பேயைப் போல இறைவனையும் காண வல்லார்க்கே அம்மையப்பரின் அருள் அநுபவம் கிட்டும். அல்லாதார்க்கு அவ்வநுபவம் கைகூடாது என்பதாம்.

பேய் பிடிக்கப்பட்டாள் தன்னுடைய மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் தன்வசமின்றிப் பேயின் வசமேயாய் நிற்பள். அதுபோல உயிரும் இறையுணர்வு தோயப்பெற்று, தன்பயமின்றி அவ்விறைவன் மயமேயாய் நிற்க வேண்டும் என்பதாம். இங்ஙனம் தன்னை மறந்து தன்னாமம் கெட்டுத் தலைவன் தாள் தலைப்பட்டவர்களே ஞானியர்களாவர்.

36. **நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடில்**
நாலாம் நிலையாம் என்(று) உந்தீபற
நாதற்(கு) இடம்அ(து) என்(று) உந்தீபற.

வி-ரை: பிராணவாயு சுழுமுனை வழியே நாதக்கலை உள்ள உச்சியிற் செல்ல அருள்வழியில் நிலையுறுவோரே நாலாம் நிலையாகிய சாயுச்சிய நிலையினை எய்துவர். அதுவே இறைவன் எழுந்தருளியிருக்கத்தக்க இடமாகும் என்பதாம்.

நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐம்பெரும் பூதங்களுள் நான்காவதாக இருப்பது வளியாம். அது ஈண்டுப் பிராணவாயு எனப்பட்டது. உயிர்கள் இறைவன் மாட்டுப் பெறும் பேறுகள் நான்கு. அவை சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பன.

சாலோகமாவது:- ஞாலக்கடவுளர்களின், [புவனபதிகளின்] உலகங்களை அடைந்து ஒருவர் மனையில் பணி செய்யும் அகத்தொண்டர்க்கு உள்ள உரிமை போல அவ்வுலகத்துள் எவ்விடத்தும் தடையின்றி இயங்கி அங்குள்ள இன்பத்தை நுகர்ந்து வாழ்தல்.

சாமீபமாவது:- மகனுக்குளதாகிய உரிமைபோல அஞ் ஞாலக் கடவுளர்களுக்கு நெருங்கினவராயிருந்து அவர் தம் இன்பத்தை நுகர்ந்து வாழ்தல்.

சாரூபமாவது: தோழற்குரிய உரிமைபோல அஞ் ஞாலக் கடவுள்களோடு ஒத்த வடிவமும் ஒத்த அணியும் ஒத்த நுகர்வும் பெற்று வாழ்தல்.

சாயுச்சியமாவது:- சரியை முதல் யோகம் ஈறாகிய ஞானங்கட்குப் பயனாகிய சாயுச்சியமும், ஞானத்தில் ஞானதிற்குப் பயனாகிய சாயுச்சியமும் என இருதிறப்படும். அவற்றுள் சரியை முதல் யோகம் ஈறாகிய மூன்றிலுமுள்ள ஞானத்திற்குப் பயனாகிய சாயுச்சியமாவது ஞாலக் கடவுள்களால் அதிட்டிக்கப்பட்டு அவர்கள் செய்யும் ஆணைகளை அவர்கள் போலவே செய்துகொண்டு வாழ்வதாம். முடிபாகிய ஞானத்திற்குப் பயன் எனப்படும் சாயுச்சியமாவது சிவபெருமான் திருவடியில் இரண்டறக் கலந்து சிவானந்தத்தை நுகர்வதாம்.

ஈண்டுக் குறிக்கப்பட்ட சாயுச்சியமாவது சிவபெருமான் திருவடியில் இரண்டறக் கலந்து சிவானந்தத்தை நுகர்தலாகும். இதுவே வீடுபேறு எனப்படும்.

நாலாயபூதம்:- [விண்ணிலிருந்து கீழ் இறங்கும் வரிசையில் நாலாவது பூதம் காற்று அதற்குரிய வித்தெழுத்து [பீஜாட்சரம்] வகாரம் [வ] திருவைந்தெழுத்தில் பிரணவ கலைகளில் நாதமாக இருப்பது சிகாரம்[சி] இவை இரண்டும் ஒன்றினால் 'வசி' அல்லது 'சிவ' என்றாகும். இந்த முத்தி பஞ்சாட்சரத்தை ஓதினால் நாலாம் நிலையாகிய நின்மல துரியநிலை கைவரும் என்பது, இப்பாடற்கு ஆதீனங்களில் மரபாகக் கூறப்பட்டு வரும் உரையாகும். முத்தி பஞ்சாக்கரம் ['வசி' 'சிவ'] ஆகிய இரண்டனுள் ஒன்றைத் தத்தம் மரபிற்கேற்ப ஆதீனங்களில் உபதேசிக்கப்பட்டு வருகிறது.

நாதம் என்பது ஓசையாதலின் அது அதனைக் குணமாகவுடைய ஆகாயத்தைக் குறிக்கும். பிருதிவி முதலிய சாதாரண பூதங்கள் நான்கும், அவற்றிற்கெல்லாம் மேலான ஆகாயமும், அவற்றின் முதலாகிய தன்மாத்திரைகளும் மற்றும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும், அடங்கி உள்ளம் ஒருவழிப்பட்டால் நாலாம் நிலையாகிய துரியநிலை கிடைக்கும் என்பது பொதுவாகச் சொல்லப்படும் பொருள் என்பர் திரு.சி.அருணைவடிவேலு முதலியார் அவர்கள்.

37. சென்ற நெறியெல்லாம் செந்நெறி யாம்பாடி
நிறை பரிசுஅறிந்(து) உந்தீபற
நீசெயல் செய்யாதே உந்தீபற.

வி-ரை: செல்லும் வழியனைத்தும் சேம நெறியாகுமாறு இறைவன் நிற்கும் நிலையை அறிந்து, எல்லாச் செயல்களையும் தன் செயல் என்று கருதாமல் அவ்விறைவன் செயலென்றே கருதி வாழவேண்டும் என்பதாம்.

உயிர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கருவி கரணங்கள் இறைவனின் அருள்வழி நின்று இயங்குவன. அவையெல்லாம் அவனது உடைமையாகும். உயிர்கள் அவனது அடிமையாகும். இவ்வுணர்வுவழி நின்று 'பொல்லாத தீவினையிற் போகார்கள் போனாலும், எல்லாம் சிவன் செயலே என்றிருப்பர்' என்னுமாப்போல எல்லாம் சிவன் செயலே என்று உணர்ந்து அவ்வருள்வழி நடத்தல் வேண்டும் என்பது இதன் கருத்தாம்.

'ஏதேது செய்திடினும் ஏதேது பேசிடினும்
ஏதேது சிந்தித்(து) இருந்திடினும் - மாதேவன்
காட்டிடுவ தானஅருட் கண்ணைவிட்டு நீங்காது
நாட்டம் அதுவாய் நட'.

'ஏதேது செய்தாலும் ஏதேது சொன்னாலும்
ஏதேது சிந்தித்(து) இருந்தாலும் - மாதேவா
நின்செயலே என்று நினதுஅருளா லேஉணரில்
என்செயலே காண்கிலே னே.'

என்னும் சிவபோகசாரப் பாடல்கள் ஈண்டு நினைவு கூர்தற்குரியன.

38. பொற்கொழுக் கொண்டு வரகுக்(கு) உழுவதுஎன்?
அக்கொழு நீயறிந்(து) உந்தீபற
அறிந்(து) அறியா வண்ணம் உந்தீபற.

வி-ரை: பொன்னினாலாய கொழுவினைக் கொண்டு வரகுக்கு உழுவதால் என்ன பயனுளது? ஒன்றுமில்லை.

அதுபோலக் குருவருளால் பெற்ற திருவருள் தன்மையை நன்கறிந்திருந்தும், அத்திருவருள் இன்பத்திலேயே திளைத்து இன்புறாது உலகியல் சூழலில் உழன்று வருந்துவதால் என்ன பயன்? ஒன்றுமில்லை. அவ்வாறு உழலுதல் ஞானத்தைப் பெற்றும் பெறாத தன்மையது என்பதாம்.

பொற்கொழு - சிவஞானம். வரகுக்கு உழுதல்- உலகியல் சூழலில் தொடக்குறுதல்.

39. **அதுஇது என்னா அனைத்தறி வாகும்**
அதுஇது என்றறிந்(து) உந்தீபற
அவிழ்ந்த சடையார் என்(று) உந்தீபற.

வி-ரை: பொருள்களை அது என்றும் இது என்றும் சுட்டியறியாது, எல்லாவற்றையும் ஒருங்கறியவல்ல பெருமானாகிய இறைவனே, தனது கருணையினால் உயிர்களோடு ஒன்றி அவ்வுயிர்களுக்கு உடனாய் நின்று உதவுகின்றான். அத்தகைய பெருமான் விரிந்த சடையினையுடைய சிவபெருமானே யாவன் என்பதாம்.

முதல் வரியில் அதுஇது என்பன பொருள்களைச் சுட்டியுணரும் நிலையைக் குறிப்பன. இரண்டாம் வரியில் அது என்பது வினையின் நீங்கி விளங்கி நிற்கும் இறைவனைக் குறிப்பது. அப்பெருமானே தனது கருணையினால் உயிர்க்குயிராய் விளங்கி உடனாய் நிற்கின்றான் என்பதை 'இது என்றறிந்து' என்ற தொடர் விளக்கி நிற்கின்றது. இது-இவ்வுயிர். அவிழ்ந்த சடை- விரிந்தசடை. இறைவனை 'அவிழ்ந்த சடையான்' என்றும், 'தாழ் சடையான்' என்றும் குறிக்கும் வழக்கம் மிகுதியும் காணலாம். 'தானும் தன் தையலுமாய்த் தாழ்சடையோன் ஆண்டிலனேல்' என்னும் திருவாசகமும், 'தாழ்சடையான் பனந்தாள் திருத்தாடகையீச்சரமே' என்னும் திருஞானசம்பந்தர் தேவாரமும் காண்க. திருப்பனந்தாளில் எழுந்தருளியிருக்கும் இறைவனது திருப்பெயர் 'செஞ்சடையப்பர்' என்பதாகும். இத்திருப்பெயரை இவ்வூர்ப் பதிகத்து ஐந்து இடங்களில் குறித்துச் செல்கின்றார்

திருஞானசம்பந்தர். அத்திருமுடியே குறைவுடைய மதியைக் காத்தருள் செய்தது: அதுவே உயிர்களுக்கு நேர்ந்த பெரும் தீங்காகிய கங்கைப் பெருக்கைத் தடுத்து அருள் செய்தது; அதுவே பகைப் பொருளாகிய மதியத்தையும் பாம்பையும் ஒருங்கு தாங்கி, உயிரினங்கள் அனைத்தும் பகையின்றி வாழவேண்டும் என்ற பண்பினை அறிவித்து நிற்[illegible]; அதுவே புண்ணியஞ் செய்வார்க்கு வன்னியும் கொன்றையும் எருக்கும் அணிய இடனாய் நின்று அருள் செய்வது; என்னும் குறிப்பினை அவ்வைந்து இடங்களும் விளக்கி நிற்கின்றன. இத்தகைய கருத்துக்களையெல்லாம் ஒருங்கு சிந்திக்குமாறு செய்த 'அவிழ்ந்த சடையார்' என்னும் தொடரினை மறக்கலுமாமே!

40. அவன்இவன் ஆவது அவனருளால் அல்ல(து)
இவன்அவன் ஆகான் என்(று) உந்தீபற
என்றும் இவனே என்(று) உந்தீபற.

வி-ரை: சிவபரம் பொருள் மானுடச் சட்டை தாங்கி மானிடரை ஆட்கொள்வது அப்பரம் பொருளது அளவிறந்த கருணையினாலேயாம். அது மான் காட்டி மான் பிடிப்பதுபோலாம். அங்ஙனம் மானுட வடிவந்தாங்கினும், அம்மனித உயிர்களுள் ஒன்றென அதனைக் கருதுதல் கூடாது. உயிர்களும் இறைவனது அளவிறந்த கருணையினால் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி ஆட்கொள்ளப்பட்டபோதிலும் சிவமே எனக் கருதுதல் கூடாது என்பதாம். முத்தி நிலையிலும் இறைவன் ஆண்டானாய் உயிர் அடிமையாய் நிற்பதன்றி, உயிர் இறைவனே யாதல் என்றும் இல்லை என்பதாம்.

'சிவனடிலயச் சேரும் முத்தி செப்புவதிங்குயாமே' என்னும் சிவஞான சித்தியாரும்.

> "மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
> புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்' எனப்புகன்று
> நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி
> அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசமர்ந்திருந்தார்."

எனச் சேக்கிழார், அப்பர் பெருமான் அடைந்த முத்தி நிலையை விளக்குமாறும் காண்க.

"அவன்இவனாய் நின்ற(து) அவனருளால் அல்ல(து)
எவன்அவனாய் நிற்கின்ற(து) ஏழாய் - அவனிதனில்
தோன்றுமரப் புல்லூரி தொல்லுலகில் அம்மரமாய்
ஈன்றிடுமோ சொல்லாய் இது."

எனனும் திருக்களிற்றுப்படியாரும் இத்திருவுந்தியார் கருத்தினை விளக்கி நிற்கும்.

41. முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்(து)
அத்தி பழுத்த(து) என்(று) உந்தீபற
அப்பழம் உண்ணாதே உந்தீபற.

வி-ரை: முத்திபெறுதற்கு முதன்மையுடைய உயிரினிடத்து ஆணவம் என்னும் கொடிபடர்ந்ததால் உடல் ஆகிய அத்திப்பழம் பழுத்தது, எனவே பிறவி தோன்றியது. ஆதலின் உடலாகிய பழத்தை உவர்ப்பதுடன் அதன்வழியாக வரும் உலகியல் நுகர்வுகளையும் நுகராது விட்டுவிட வேண்டும் என்பதாம்.

உயிர் முத்தி பெறுதற்கு உரிமையுடையது ஆதலின் அது 'முத்திமுதல்' எனப்பட்டது. மோகக்கொடி – ஆணவமாகிய கொடி. வளர்ந்து வாழ வேண்டிய கொடியாகிய உயிரை, இவ் ஆணவமாகிய கொடி படர்ந்து அதனை மூடி அடக்கிவிடுகின்றது. இதனைப் 'படர்ந்து' என்னும் சொல் நன்கு விளக்குகின்றது. உயிரது மெய்யறிவை ஆணவம் மறைத்துவிடும் என்பது கருத்து. ஆணவமான படலம் கிழித்து அறிவில், காணரிய மெய்ஞ்ஞானக்கண்காட்டி' எனக் குமரகுருபர முனிவரும் இவ்வாணவ மலத்தின் இயல்பினை விளக்குதல் காணலாம். அத்தி– எலும்பு: ஆகுபெயராய் உடலைக் குறித்தது. சிலேடையாக அத்திப்பழத்தையும் குறிக்கும். அப்பழம்–அவ்வுடலாகிய பழம். உயிரினின்றும் பழுக்க வேண்டியது முத்திப் பழமே யாகும். அங்ஙனமின்றி அது அத்திப்பழத்தைப் பெற்றது ஆணவ மலத்தினாலாகும். அதனைத் திருவருளாகிய வாளினால் அறுத்துவிட உயிரினின்றும் பழுக்க வேண்டிய முத்திப்பழம் தடையின்றிப் பழுத்து விடும் எனக் கூறுகின்றார். திருக்களிற்றுப்படியார் ஆசிரியரும்,

"முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்த(து) அருளென்னும் - கத்தியினால்
மோகக் கொடியறுக்க முத்திப்பழம் பழுக்கும்
ஏகக் கொடியெழுங்காண் இன்று"

எனக் கூறுதல் ஈண்டு ஒப்பிட்டுக்காண்டற்குரியது.

42. அண்டம் முதலாம் அனைத்தையும் உட்கொண்டு
கொண்டத்தைக் கொள்ளாதே உந்தீபற
குறைவற்ற செல்வம் என்(று) உந்தீபற.

வி-ரை: அண்டம் முதலிய அனைத்துப் பொருள்களையும் உள்ளடக்கி நிற்கும் மாயையைப் பற்றிநில்லாது, குறைவிலா நிறைவாய இறைவனையே பற்றிநிற்க வேண்டும் என்பதாம்.

"சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றியப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்"

என்னும் திருவாசகமும் இக்கருத்தினை விளக்கி நிற்றல் காணலாம்.

43. காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் உண்டார் என்(று) உந்தீபற
வரட்டுப் பசுக்கள் என்(று) உந்தீபற.

வி-ரை: உடலிடங் கொண்டு உயிர்க்குயிராக விளங்கும் இறைவனது அருளால் அவனது திருவடியின்பத்தை அநுபவியாது வாழ்வை உகந்து மடவாரின் வல்வினைப்பட்டு ஆழமுகக்கும் உயிர்கள் பயனற்ற வரட்டுப் பசுக்களை ஒப்பர் என்பதாம்.

44. சிந்தையி னுள்ளும்என் சென்னி யினும்சேர
வந்தவர் வாழ்கஎன்(று) உந்தீபற
மடவா ளுடனேயென்(று) உந்தீபற.

வி-ரை: என் சித்தத்தே தன்னை வைத்தும், அருளினாலே தாளினைத்தலைமேல் சூட்டியும் ஆட்கொண்டருளிய பெருமான் தனது திருவருட் சத்தியுடன் என்றென்றும் வாழ்க என்பதாம்.

இதுவரை 43 பாடல்களால் உலகிற்கு அருளுரை அருளிய ஆசிரியர், இது காறும் தமக்கு உள்நின்றும் முன்னின்றும் உணர்த்தியருளிய ஞானாசாரியனாகிய உமையொரு பாகனை இப்பாடலில் வாழ்த்துகின்றார். பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகையிருப்பதால் தான், மக்கள் மண்ணில் நல்லவண்ணம் வாழ இயலுகின்றது. அப்பெருந்தகை அப்பரிசே வந்து அருள் செய்தலால் அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டையும் அவ்வுயிர்கள் பெற இயலுகின்றது. இங்ஙனம் உயிர்கள் அனைத்திற்கும் செய்யும் பெருங்கருணையையும் தமது சிந்தையிலும் சென்னியிலும் சேர இருந்து அருள் செய்த பெற்றியையும் நினைந்தே ஆசிரியர் அந்நன்றியறிதலைக் கூறுமுகமாக அப்பெருமானை இப்பாடலில் வாழ்த்தியருளுகின்றார்.

இங்ஙனமே திருக்களிற்றுப்படியார் ஆசிரியரும் தமது நூலின் இறுதியில் வாழ்த்தி வணங்குகின்றார். அப்பாடல் வருமாறு:-

> "சிந்தையிலும் என்தன் சிரத்தினிலும் சேரும்வகை
> வந்தவனை மண்ணிடைநாம் வாராமல் - தந்தவனை
> மாதினுடன் எத்திறமும் வாழ்ந்திருக்க என்பதலால்
> ஏதுசொலி வாழ்த்துவேன் யான்."

45. **வையம் முழுதும் மலக்கயங் கண்டிடும்**
உய்யவந் தான்உரை உந்தீபற
உண்மை யுணர்ந்தார் என்(று) உந்தீபற.

வி-ரை: உய்ய வந்த நாயனாரால் அருளிச் செய்யப்பட்ட இத்திருவுந்தியார் என்னும் நூல், உலகினரைப் பாசமாகிய கடலினின்றும் கரையேற்றும் நீள்புணையாகும். இதனையுணர்ந்தவர்கள் மெய்ப்பொருளை உணர்ந்தவர்களாவர் என்பதாம்.

இத்திருப்பாடலின் ஆசிரியர் தமது பெயரையும், தாம் அருளிய நூலின் பயனையும் அறிவுறுத்தியுள்ளனர்.

'கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றுஈண்டு வாரா நெறி''.

திருவுந்தியார் தெளிவுரை முற்றிற்று.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை